அசல்

10.9.1937 நீ. கந்தசாமி

அசல் –1 நகல் –

உ

நீ. கந்தசாமி பிள்ளை

பள்ளியக்கிரகாரம்
தஞ்சாவூர் 10 . 9 . 1937.

தமிழ்ப் பெரியார் திருவடிகளுக்கு,

வணக்கம், நலம்.

'இருக்கோவைப்' புத்தகம் கிடைக்கப் பெற்றேன். பதிப்பு வெளியானவுடனேயே, என்னையும் நினைவுகூர்ந்து அனுப்பிய தங்கள் பேரன்புக்கு என்றும் கடமைப்பட்டுள்ளேன். இப்பதிப்பைக் கண்டவுடன் யான் கொண்ட இன்பம் அளவிடக்கூடியதன்று. உரையைப் படிக்குந்தோறும், ஏனைய சங்கநூலும், திருமுறை இலக்கியமும், தங்கள் பேரறிவுப் பேராற்று. தங்கள் கையாலேயே வெளிவரவேண்டுமென்ற விருப்பம் எவர்க்கும் எழுதல் இயல்பேயாகும். இறைவன் திருவருளால் விரைவாகும் துணிபுடையேன். ஸ்ரீமான் சங்கர ஐயரவர்களுக்கு இந்தியன் பாங்கில் வேலை கிடைத்தது, தங்கள் பெருங்கருணையின் செல்வாக்கினாலேயே என்பது அறிவேன். இந்நற்செய்தியில் உளமகிழ்பவர் யானும் ஒருவன் என்பதை உட்கொண்டு தெரிவித்த தங்கள் பேரன்பு என்னைத் தங்களுக்குப் பெரிதும் உரிமையாக்குகின்றது. இப்பணியால் என் அண்ணன் ஸ்ரீமான் சிவசாமியவர்க

அசல்

10.9.1937 நீ. கந்தசாமி

அசல் -1 நகல் —

ஜ. 311-312 (19)

ர் வியாக்யானைப்பெ ஃபேட போன்றவ ர்களன்றோ! சிச்சிறு பணியேனும் தங்களுக்கு ஆற்ற எங்கட்குக் கிடைத்த பேறு என்னை திருப்தியுறச் செய்கின்றது.

தங்கள் அணுக்கத் தொண்டனாக வமைந்து சேவை செய்யும் பேறு எனக்கிவ்வளவும் வாய்க்கா தொழியினும், இனியாவது இறைவன் அப்பேற்றை அருளவேண்டுகிறேன்.

தங்கள் பொன்னடிக்கு என்றும்
நன்றியுள்ள
அடியன்
நீ. கந்தசாமி

Camp. Mayavaram